Dr. H. V. HANDE : Sir, may I know whether this Government have received representations from the Municipal employees who had retired before 14th January 1970 especially from Madurai and Palani and if so, what action have this Government taken on it, especially in view of the fact that many of these employees are old and are in a precarious condition without any facilities being provided for them? Also, this particular Government Order leaves them out completely and so, will the Government provide some *ad hoc* benefits to them without waiting for another Government Order to be passed by both the Houses of the Legislature providing for such benefits?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓய்வூதியம் 14—1—1970-லிருந்து, அதற்குப் பிறகு ஓய்வு பெறுகிறவர்கள் மட்டுமே என்று 5—1—1970-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை கூறுகிறது. ஆனால் அதற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களும் தங்களுக்குத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்வதாக இருந்தால் இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சில சங்கடங்கள் ஏற்படும். ஆகையால் அதை வேறு அடிப்படையிலே தான் ஆராய வேண்டும். ஆகவே அதை பார்ட் 2 ஸ்கீமில் வைத்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பென்ஷன் பெறுகிறவர்கள் டிரஷரியில் போய் பென்ஷனைப் பெற்றுக்கொள்வதில் பல குறைகள் இருக்கின்றன. ஆகவே பிற சில மாநிலங்களில் கையாளுவதைப் போன்று நமது மாநிலத்திலும் பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் கிடைக்கும்படி செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சில பல இடங்களுக்கு மற்ற சில மாநிலங்களைப்போல் மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது. சில இடங்களில் டிரஷரியில் போய் வாங்கும் நிலைமை இருக்கிறது. அதைக் கூட மாற்றி மணியார்டர் மூலம் தரலாமா என்ற யோசனை இருக்கிறது. எந்தெந்த வகையிலே என்று தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

கோயம்புத்தூருக்கு அருகே "மாடல்" நகரம்

* 70 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகருக்குப் பக்கத்தில் ஒரு "மாடல்" நகரம் உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், பல நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சிகளாக மாறுகிறபோது, பல கிராமங்கள் நகரப் பஞ்சாயத்துக்களாக மாறி இருக்கின்றன. அதை முறையாக அமைக்க மாதிரி நகரமாக ஒரு இடத்திலே ஒரு நகரத்தை அமைத்தால் நன்ருக இருக்கும். அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி இரண்டு அமைச்சர்கள் சம்பந்தப்பட்டது. எந்தெந்த இடங்கள் நகரமாக அமையலாம் அல்லது புது வளர்ச்சி பெறலாம் என்று யோசனை சொல்வது என்னுடையது. எந்த கிராமத்தை நகரமாக ஆக்கலாம் என்று முடிவு செய்வது கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிக் கேட்டால் அது பற்றி யோசிக்கப்படும்.

DR. H. V. HANDE : Now that the Town-Planning Bill has been passed, may I know whether this Government have any ideas to see that certain towns like Coimbatore, Madurai and Madras are going to have satellite towns, whether any beginning has been made especially with regard to Coimbatore and with regard to other towns? Can the Minister give us some sort of a brief outlay?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது டவுன் ப்ளானிங் மட்டுமல்ல—டவுன் அண்டு கண்டிரி ப்ளானிங் பில் ஆகும். ஒரு நகரத்தைபற்றி மட்டும் உடனடியாக ஆலோசிப்பது இல்லை. பரவலான அடிப்படையில் அமைத்து—அந்தப் பரவலான அடிப்படையில் அந்த அந்தப் பகுதியில் எந்த விதமான வளர்ச்சி தேவை என்பதை அந்தந்தப் பகுதியில் உள்ள நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட குழு பரிசீலித்து அந்தப் பரிசீலனையின் முடிவுகளும் மூன்று, நான்கு கட்டங்களில் ஆராயப்பட்டு பின்பு நடவடிக்கைக்கு வரும். இன்னமும் கூட பரிசீலனை தொடங்கப் படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : கோவை நகரமானது மிகவும் ஜன நெருக்கடியான பகுதியாக இருக்கிறது. அதை ஒரு மாடல் நகரமாக ஆக்க ஒரு முக்கியத்துவம் கொடுத்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதி எதாவது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் . கோவை நகரமே ஒரு வகையில் மாடல் நகரமாகத்தான் இருக்கிறது. ஆகவே அதை ஒரு மாடல் நகரமாக ஆக்குவது என்பது அவ்வளவு பொருத்த

மாகத் தெரியவில்லை. கோவை நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒரு சாடிலைட் டவுன் என்ற அளவுக்குத் தேவையான வகையில் உருவாக்கலாம்.

சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள்

*71 வின.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த, ஆயுர்வேத வைத்திய முறைகளை விரிவுபடுத்தி, வளர்ப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இதற்கான இயக்குநர்கள் போன்ற பதவிகள் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(உ) வருடா வருடம் இதற்காக எவ்வளவு ரூபாய் செலவிடப் படுகிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) முதல் (உ) வரை : சட்டப்பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : இம்மாதிரித் துறையில் ஈடுபட்டிருப் பவர்களை நம்முடைய கிராம டிஸ்பென்சரிகளில் பகுதி நேர ஊழியர்களைப் போல ஈடுபடுத்துகிறார்கள் என்பது உண்மையா? அதை மாற்றி அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது ஏற்கனவே ஏற்பட்ட ஒரு அமைப்பு முறையாகும். உள்ளாட்சித் துறை மூலம் பல்வேறு சிறுசிறு கிராமங்களில் எல்.ஐ.எம். டாக்டர்களை—இன்னும் சொல்லப்போனால் கிராம வைத்தியர்கள் என்று தகுதி பெற்ற வர்களை—ஓரளவு மருத்துவ வசதியாவது ஏற்பட வேண்டும் என்கிற முறையில் ஆண்டுக்கு 1,800 ரூபாய் என்கிற முறையில் உதவித் தொகை வழங்கி—நியமித்தார்கள், அது தவிர பி.ஐ.எம். படித்தவர்களும் உரிய சமயத்தில் அரசாங்கத்தினரால் வேறு துறைகளிலும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Is the Government aware that there are some excellent medicines in Siddha and Ayurvedic systems of medicines regarding family planning? Will this Government come forward to give more importance for such medicines in Ayurvedic and Siddha systems of medicines?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Such medicines are even now tested by eminent doctors in the allopathic field so that they may prove their worth and when the test is completed, it may be announced by the Central Government and they may be utilised.

@ 87-88 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.